நேரம் 2:00 மணித்தியாலயம் இ.சைவப்புலவர் திரு. த. அருச்சுவன் (0771235838)

பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. "பண்பாடு" என்பதுடன் தொடர்புடைய தொகுதி.
   i) இலத்தின், ரி.கே.சிதம்பரநாத முதலியார், எலியட் ii) ஒல்லாந்து, டி.மோகன், பிளினி
   iii) அரபு, திருமூலர், சுவாங்யுவான் iv)போர்த்துக்கேயம், இராமநாதன், மெகஸ்தனிஸ்
   v) ஜப்பானிஸ், நீலகண்டசாஸ்திரி

2. இந்துப் பண்பாடு வளர்ந்த புராதனமான இடங்கள் அடங்கும் தொகுதி.
   i) வற்சம், கோசலம், காந்தாரம், சாஞ்சி ii) பஞ்சாபி, மகதம், அவந்தி, விரிஜி
   iii) அவந்தி, காஞ்சி, பாரசீகம், அசீரியா iv) மகதம், கோசலம், விதேகம், காசி
   v) கன்னோசி, சிந்து, உஜ்ஜயினி, பாடலிபுரம்

3. ஹரப்பா நகர அமைவிடம்.
   i) கராச்சியிலிருந்து 300 மைல் தொலைவில் உள்ள சிந்து மாநிலத்தின் சிந்து நதிக்கரையில்
   ii) மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் லாகூரிலிருந்து 100 மைல் தொலைவில் உள்வரவி ஆற்றங்கரையில்
   iii) மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் லாகூரிலிருந்து 300 மைல் தொலைவில் உள்வரவி ஆற்றங்கரையில்
   iv) கராச்சியிலிருந்து 100 மைல் தொலைவில் உள்ள சிந்து மாநிலத்தின் சிந்து நதிக்கரையில்
   v) கராச்சியிலிருந்து 400 மைல் தொலைவில் உள்ள பஞ்சாப் மாநிலத்தின் ஆற்றங்கரையில்

4. இருக்கு வேதம் அரசர்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
   i) புருகுத்ஸன். வத்ரயஸ்வன், திவோதாஸன், பிஜவனன்
   ii) சுதாசன், அபராஜிதன், கிரிசித்து, கனிஷ்கன்
   iii) இராவணன், இராமன், துருபதன், விதுரன், தசரதன், வாலி
   iv) அருச்சுனன், வீமன், அசோகன், தருமர், பாஞ்சாலன்
   v) புருகுத்ஸன், வத்ரயஸ்வன், திவோதாஸன், புஸ்யமித்திரன்

5. இருக்குவேதம் கூறும் விண்ணுலகத் தெய்வங்களின் தொகுதி
   i) அக்கினி, சோமன், பிருதுவி, சிந்து, பிரஜாபதி
   ii) உஷை, விஷ்ணு, ஆதித்தியன், வருணன், பூசன், சவித்திரி
   iii) விஷ்ணு, ஆதித்தியன், வருணன், பூசன், அக்கினி, துவஷ்டா
   iv) பிருதுவி, சோமன், பிரகஸ்பதி, அக்கினி, துவஷ்டா, சிந்து
   v) இந்திரன், உருத்திரன், வாயு, பர்ஜன்யன், மதரிஸ்வான்

www.ked.lk

6. "கர்ஷணம்" என்னும் கிரியை
   i) அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ளது.
   ii) வீட்டுக் கிரியைகளுள் ஒன்று
   iii) மாதம் ஒரு முறை ஆலயத்தில் நடக்கும் கிரியை
   iv) ஆலயம் அமைப்பதற்காக நிலத்தைப் பண்படுத்தல் பற்றியது.
   v) கும்பாபிஷேகக் கிரியைகளுள் ஒன்று

7. சாக்த ஆகமங்கள் அடங்கிய தொகுதி
   i) அதிர்ப்புத்தினியம், பாஞ்சராத்திரம், வைகாசனம்
   ii) வீரம், கிரணம், காரணம், வாதுளம், ஈஸ்வரம்
   iii) ருத்திரயாமளம், குலசூடாமணி, ஹயசீர்ஷம், ஈஸ்வரம்
   iv) ருத்திரயாமளம், குலசூடாமணி, பிரபஞ்சசாரம், ஞானாவர்ணவம்
   v) மகாசநத்குமாரம், விசுவாமித்திரம், ஹயசீர்ஷம், ஈஸ்வரம்

8. சமஸ்கிருத இலக்கிய மரபில் மகாகவிகள் என்று போற்றப்படும் முப்பெரும் புலவர்கள்
   i) வான்மீகி, வியாசர், காளிதாசர்
   ii) கம்பர், திருவள்ளுவர், சேக்கிழார்
   iii) கம்பர், இளங்கோ, திருவள்ளுவர்
   iv) வான்மீகி, கம்பர், காளிதாசர்
   vi) வான்மீகி, வியாசர், சேக்கிழார்

9. மகாபாரதத்தில் கூறப்படும் திருதராஷ்டிரனின் புதல்வர்களை உள்ளடக்கிய தொகுதி
   i) திரௌபதி, ஜானகி, திட்டத்துய்மன், அசுவத்தாமன்
   ii) அசுவத்தாமன், திட்டத்துய்மன், சிகண்டி, துச்சாதனன்
   iii) அபராஜிதன், திருஷரதன், பீமரதன், சிகண்டி
   iv) தசரதன், வீமன், பீமரதன், சிகண்டி
   v) குண்டபேதன், பீமரதன், அபராஜிதன், தண்டி

10. மகாபுராணங்கள் தொடர்பான பொருத்தமான சேர்மானம்.
   A. மகாபுராணங்கள் வேதாகம மரபைப் பிரதிபலிப்பன.
   B. வடமொழிப் புராணங்களை ஆதி புராணங்கள் என்பர்.
   C. வடமொழிப் புராணங்கள் பௌராணிகரால் பரப்பப்பட்டன.
   D. தல புராணங்கள் மகா புராணங்களினுள் அடங்கும்.
   E. மகாபுராணங்கள் தமிழ் மொழியிலும் தோன்றின.
   1. BCE 2. ABC 3. ABE 4. BCD 5. ACD

11. புராணங்களுக்குரிய இலட்சணங்கள் தொடர்பான மிகவும் பொருத்தமான தொகுதி.
   A. தசலட்சணங்கள் தமிழ்மொழிப் புராணங்களுக்குப் பொருந்தாது.
   B. பஞ்சலட்சண வரையறை வடமொழிப் புராணங்களில் கூறப்பட்டுள்ளன.
   C. ஹேது எனும் இலட்சணம் பஞ்சலட்சணங்களுள் அடங்கும்.
   D. தசலட்சணங்கள் மகாபுராணங்களுக்கு உரியன.
   E. சர்க்கம் என்பது பிரபஞ்சப் படைப்புப் பற்றியது.
   1. ABE 2. ABD 3. BCD 4. ABC 5. ADE

12. சங்ககால பெண்பாற்புலவர்கள் அடங்கிய தொகுதி.
   i) தாமனா, கஸ்தூரிபாய்
   ii) நச்செள்ளையார், திலகவதியார்
   iii) இசைஞானியார், வெள்ளிவீதியார்
   iv) வாசுகி, பாரிமகளிர்
   v) ஔவையார், காக்கைபாடினியார்

www.ikedu.lk

13. அறநெறிக்காலத்தில் சிவபெருமான் மீது பக்தி கொண்ட இரு அடியார்களின் பெயர்கள் அடங்கும் தொகுதி.
i) கூற்றுவநாயனார், திருமூலர் ii) பொய்கையாழ்வார், கபிலதேவர்
iii) மூர்த்திநாயனார், பட்டினத்தடிகள் iv) நக்கீரர், காரைக்கால் அம்மையார்
v) காரைக்கால் அம்மையார், சாக்கிய நாயனார்

14. பல்லவர் காலத்தில் அப்பர், சம்பந்தர் ஆகியோரால் சமணமதத்திலிருந்து சைவசமயத்திற்கு மீட்கப்பட்ட இரு அரசர்களும் முறையே அடங்கும் தொகுதி.
i) இரண்டாம்பரமேஸ்வரவர்மன், இராஜசிம்மன் ii)மாமல்லன், நின்றசீர்நெடுமாறன்
iii) மகேந்திரவர்மன், நின்றசீர்நெடுமாறன் iv) நந்திவர்மன், இராஜசிம்மன்
v) மகேந்திரவர்மன், மாமல்லன்,

15. சோழர்கால வைணவ சமய மரபில் ஏற்பட்ட வளர்ச்சி.
i) அத்வைத மரபு வளர்ச்சி பெற்றமை. ii) சந்தான குரவர் மரபு உருவாகியமை.
iii) தென்கலை வைணவம் உருவாகியமை. iv) கம்பராமாயணம் எழுதப்பட்டமை.
v) வடகலை வைணவம் உருவாகியமை.

16. இரண்டாம் பக்திநெறிக்காலம் எனக்கருதப்படுவது,
i) சோழர்காலம் ii) பல்லவர்காலம் iii) சங்ககாலம்
iv) விஜயநகர நாயக்கர் காலம் v) சங்கமருவிய காலம்

17. வடஇந்திய பக்திஇயக்க நெறியாளர்கள் பெயர்கள் அடங்கும் தொகுதி.
i) கபீர்தாசர், பரீசைதன்யர், துளசிதாசர், மீராபாய்
ii) தயானந்த சரஸ்வதி, துளசிதாஸர், கபீர்தாசர், விவேகானந்தர்
iii) கபீர்தாசர், மோகன்ராய், துளசிதாசர், மீராபாய்
iv) துளசிதாசர், விவேகானந்தர், கபீர்தாசர், மீராபாய்
v) கபீர்தாசர், தயானந்த சரஸ்வதி, துளசிதாசர், மீராபாய்

18. பக்தியியலாளரையும் சீடரையும் ஒழுங்காகக் குறிக்கும் தொகுதி.
i) நாமதேவர்-கபீர்தாசர், கபீர்தாசர்- நாமதேவர், இராமானந்தர்-விவேகானந்தர்
ii) துளசிதாசர்- நாமதேவர், மீராபாய்-சூர்தாசர், ஸ்ரீசைதன்யர்- நாமதேவர்
iii) இராமதாசர்-குருநானக், குருநானக்-மீராபாய், மீராபாய்-சூர்தாசர்
iv) இராமானுஜர்-இராமானந்தர், இராமானந்தர்- கபீர்தாசர், கபீர்தாசர்- குருநானக்
v) இராமதாசர்- மீராபாய், மீராபாய்-ஆண்டாள், கபீர்தாசர்- குருநானக்

19. ராஜாராம் மோகன்ராயால் பிரமசமாஜம் எனும் நிறுவனம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஆண்டு.
i) 1875 ii) 1828 iii) 1823 iv) 1820 v) 1816

20. "எங்கள் மதம் வேதமதம் நாங்கள் வேதோபதேசத்தை மதிக்கின்றோம்" என்று தமிழகத்தில் 19ஆம் நூற்றாண்டில் அறைகூவிய சீர்திருத்தவாதி.
i) சுவாமி விவேகானந்தர் ii) தயானந்த சரஸ்வதி iii) இராமகிருஷ்ணர்
iv) ராஜாராம் மோகன்ராய் v) சுவாமி விபுலானந்தர்

21. பொலநறுவை முதலாம் சிவாலயத்தின் பெயர்.
i) இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் ii) பண்டித சோழேஸ்வரம் iii) ஐராவதேஸ்வரம்
iv) விக்கிரம சாளமேகேஸ்வரம் v) வானவன் மாதேவி ஈஸ்வரம்

மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்
பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙ
Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eas

22. சுவாமி விபுலானந்தர் சைவ சித்தாந்த நூட்பத்தோடு எழுதிய நூல்.
i) யாழ்நூல் ii) கோயில் iii) நடராஜ வடிவம்
iv) கணேச தோத்திர பஞ்சகம் v) ஈசன் உவக்கும் இன்மலர்கள் முன்று

23. ஸ்ரீ தட்சண கைலாய புராணத்தை தலபுராணமாகக் கொண்ட திருத்தலம்.
i) திருக்கேதீச்சரம் ii) திருக்கோணேச்சரம் iii) முன்னேஸ்வரம்
iv) சிதம்பரம் v) ஸ்ரீ ரங்கம்

24. சேரழர் காலத்தில் இராஜராஜேஸ்வரம் எனழைக்கப்பட்ட ஈழத்துச் சிவாலயம்.
i) முன்னேஸ்வரம் ii) திருக்கேதீஸ்வரம் iii) நகுலேஸ்வரம்
iv) திருக்கோணேச்சரம் v) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

25. கற்பூரத் துவீபம் எனச் சிறப்பிக்கப்பட்ட நாடு.
i) கம்போடியா ii) போர்னியோ iii) யாவா iv) சம்பா v) தாய்லாந்து

26. கனடாவில் அமைக்கப்பட்டுள்ள சைவம் வளர்க்கும் மன்றங்கள்.
i) வேதாந்த ஞானமன்றம், ஆரிய சமாஜம்
ii) கனடா இந்து கலாசார மன்றம், ஒன்ராறியோ இந்து சமய பேரவை
iii) சிவயோகம் அறக்கட்டளை, டென்மார்க் சைவ மன்றம்
iv) டென்மார்க் சைவ மன்றம், சைவ மண்டபங்கள்
v) இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம், சிவயோகம் அறக்கட்டளை

27. கோயில் கட்டடக் கலை மரபில் அடியிலிருந்து நுனிவரை நாற்சதுரமாக அமைந்த விமானம் குறித்து நிற்கும் கலைப்பாணி.
i) கற்றளி ii) குடவரை iii) திராவிடம் iv) நாகரம் v) வேசரம்

28. கற்பக்கிரகத்துக்கு மேல் விசேடமாக அளந்து அமைக்கப்படுவது.
i) பிரகாரம் ii) கோபுரம் iii) அதிஸ்டானம் iv) மூலஸ்தானம் v) விமானம்

29. உபநிடதங்களுக்கு உரை எழுதியவர்கள் அடங்கும் தொகுதி.
i) மெய்கண்டார், அருணந்திசிவம், உமாபதிசிவம்
ii) இராமகிருஷ்ணர், ஸ்ரீபதி, வல்லவர், சுகர், பலதேவர்
iii) சங்கரர், இராமானுஷர், சத்தியயோதி, உமாபதிசிவம்
iv) நீலகண்டர், நிம்பாக்கர், ஸ்ரீபதி, வல்லபர், சுகர், பலதேவர்
v) நீலகண்டர், நிம்பாக்கர், மெய்கண்ட தேவர், சுகர், பலதேவர்

30. பிரமசூத்திரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் அடங்கிய தொகுதி.
i) உபநிடத சூத்திரம், பூர்வமீமாம்சை சூத்திரம், உத்தரமீமாம்சை சூத்திரம்
ii) வேதாந்த சூத்திரம், உபநிடத சூத்திரம், உத்தரமீமாம்சை சூத்திரம்
iii) தரும சூத்திரம், சாரீரக சூத்திரம், உத்தரமீமாம்சை சூத்திரம்
iv) வேதாந்த சூத்திரம், சாரீரக சூத்திரம், உத்தரமீமாம்சை சூத்திரம்
v) வேத சூத்திரம், உபநிடத சூத்திரம், பிரம சூத்திரம், காம சூத்திரம்

31. மகாபாரதக் கதையின் பகவத் கீதை எந்த அத்தியாயத்தோடு (யோகம்) ஆரம்பிக்கின்றது.
i) ஞானயோகம் ii) பக்தியோகம் iii) கர்மயோகம்
iv) சாங்கிய யோகம் v) அர்ச்சுன விஷோத யோகம்

32. அத்வைதம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்தவர்கள்.
i) கோவிந்தபாதரும், நீலகண்டரும் ii) பாதராயணரும், கபிலரும் iii) சங்கரரும், மத்துவரும்
iv) சங்கரரும், கௌடபாதரும் v) இராமானுஜரும், வியாசரும்

www.ikedu.lk

33. இராமானுஜரது தத்துவமுறைக்கு "உபயவேதாந்தம்" என்ற பெயர் வரக்காரணம்.
   i) வேதாந்த சங்கிரகம் என்ற நூலை இயற்றியதனால்
   ii) வேதாந்த சூத்திரத்திற்கு விளக்கம் எழுதியதனால்
   iii) பாகவத மரபும் அடிப்படையாக அமைவதால்
   iv) உபநிடதங்களோடு நாலாயிர திவ்ய பிரபந்தங்களும் அடிப்படையாய் அமைவதால்
   v) உபநிடதங்களும், கீதையும் அடிப்படையாக அமைவதால்

34. மத்துவர் பாஷ்யங்கள் எழுதிய பிரதானமான மூன்று நூல்கள் அடங்கும் தொகுதி.
   i) பிரம்ம சூத்திரம், கல்ப சூத்திரம், பிரம்ம புராணம்
   ii) பிரம்ம சூத்திரம், கீதை, தசோபநிடதம்
   iii) கீதை, பிரம்ம புராணம், கடோபநிடதம்
   iv) மாண்டூக்கியகாரிகை, ஸ்ரீபாஷ்யம், கீதை
   v) கீதை, பிரம்ம சூத்திரம், பிரம்ம புராணம்

35. பதினான்கு சித்தாந்த சாஸ்திர நூல்களில் முடிமணியாய் திகழ்வது.
   i) உண்மைநெறி விளக்கம் ii) சிவப்பிரகாசம் iii) சிவஞான சித்தியார்
   iv) உண்மை விளக்கம் v) இருபா இருப.து

36. "சைவசித்தாந்தம்" என்ற சொல் முதன்முதல் இடம்பெறும் சைவநூல்.
   i) மணிமேகலை ii) நன்னூல் iii) திருக்குறள்
   iv) சிவஞானபோதம் v) திருமந்திரம்

37. ஆணவத்தோடு கூடியது என்பதால் சித்தாந்திகள் உயிருக்கு வழங்கும் பெயர்.
   i) உயிர் ii) சதசத்து iii) சீவன் iv) ஆன்மா v) பசு

38. இருளிலும் கொடியது.
   i) ஆணவம் ii) பேய் iii) கன்மம் iv) பயம் v) மாயை

39. சித்தாந்த முக்தி என்பது.
   i) துவைத முக்தி ii) விதேக முக்தி iii) அபரமுக்தி iv) பரமுக்தி v) பதமுக்தி

40. இந்து அறநூல்களில் தமிழ் நூல் அல்லாதது.
   i) திருக்குறள் ii) தர்மசாஸ்திரம் iii) ஆத்திசூடி
   iv) கொன்றை வேந்தன் v) சிலப்பதிகாரம்

41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I,II,III,IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.

I	II	III	IV
A சிவசூடாமணி	B வழுதி	C கேரளாந்தகன்	D வீரராஜேந்திரன்
E கங்கை கொண்டான்	F ஆகமப்பிரியன்	G மத்தவிலாசன்	H சிவபாதசேகரன்
I குணபரன்	J அபயகுலசேகரன்	K பண்டித சோழன்	L ரிஸபலாஞ்சனன்
M மாறன்	N முடிகொண்ட சோழன்	O சங்கர பக்தன்	P ஷேஷதாரி
Q அருள்மொழி	R சங்கீர்ணஜாதி	S செழியன்	T முதுகுடுமி

41. பாண்டிய மன்னர்களின் பெயருடன் வரும் ஒட்டுக்கள் மட்டும் கொண்ட தொகுதி.
   i) QJCT ii) AFOL iii) MBST iv) EBGH v) MRKT

மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்
பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙ
Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eas

42. ராஜேந்திர சோழனின் விருதுப் பெயர்கள் கொண்ட தொகுதி.
    i) ENOD ii) EFGD iii) EJOD iv) ENKD v) ERCD
43. ராஜராஜ சோழனின் விருதுப் பெயர்கள் கொண்ட தொகுதி.
    i) QFOL ii) QJCH iii) IFCH iv) ARCH v) AFCH
44. ராஜசிம்ம பல்லவனின் விருதுப் பெயர்கள் கொண்ட தொகுதி.
    i) IRGP ii) ARGL iii) IROL iv) AFOL v) IFOP
45. மகேந்திர வர்மனின் விருதுப் பெயர்கள் கொண்ட தொகுதி.
    i) IFOP ii) ARGL iii) IRGP iv) IROL v) AFOL

46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.

46. i) இந்து மருத்துவத்தில் மருந்துகளுடன் யோகாசனம், தியானம், விரதங்கள் போன்றவை நோய்களை ஏற்படுத்தாது.
    ii) இந்து மருத்துவத்தில் பக்கவிளைவுகள் எதுவுமில்லை.
    iii) மேல்நாட்டு மருத்துவ முறைகளுக்கு இந்திய மருத்துவம் ஆதாரமாக அமையவில்லை.
    iv) இந்து மருத்துவ மூலப்பொருட்கள் உள்நாட்டில் கிடைப்பதனால் நம்பிக்கையுடன் பயன்படுத்தப்படுகிறது.
    v) இந்து மருத்துவ முறை எந்நாட்டவருக்கும் ஏற்புடையது.

47. i) சந்தானமணி எனும் சோதிட நூல் இடைக்காடர் என்பவரால் எழுதப்பட்டது.
    ii) அராலி இராமலிங்க முனிவர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சந்தான தீபிகை எனும் சோதிட நூலை எழுதினார்.
    iii) 3ம் பராக்கிரமபாகுவின் அரசசவைப் புலவரான போசராச பண்டிதர் சரசோதிமாலை எனும் சோதிட நூலை எழுதினார்.
    iv) சோமசர்மா என்பவரால் கி.பி 1380 இல் செகராசசேகர மாலை இயற்றப்பட்டது.
    v) வானசேகர சோடச பாவனா சோதிடம் "இலகு சாதகம்" எனும் நூலில் கிரக சாந்திக் கருமங்கள் உள்ளன.

48. i) முழு எண்ணை பாதி பாதியாகப் பகுத்து சொல்லுகையில் அமையப் பெற்ற முறை "மாகணித முறை" எனப்படும்.
    ii) சோழநாட்டு முகரி என்னும் ஊரைச் சேர்ந்த காரி என்பவர் கணக்கதிகாரம் எனும் நூலை எழுதியுள்ளார்.
    iii) ஒன்று தொடக்கம் ஈறிலி பெறுமானம் முதல் எண்களை உருவாக்கிப் பயின்றமை பற்றி பரிபாடல் கூறுகிறது.
    iv) பழந்தமிழ் இலக்கியங்களில் குவளை, தாமரை, வெள்ளம், சங்கம், எனும் எண்ணுப் பெயர்கள் பெயர்களைச் சுட்டுவதாக அமைகின்றது.
    v) பாலென, காலென, பாகென.... எனும் பாடலடி பரிபாடலில் உள்ளது.

49. i) அறுவைச் சிகிச்சை இந்து மருத்துவத்தில் சல்லியக் கிரியை என அழைக்கப்பட்டது.
    ii) யசூர் வேதத்தில் நோய்க் கிருமிகள் பற்றிக் கூறும் "கிருமிநாசம்" எனும் பகுதி உள்ளது.
    iii) ஆயுர் வேதத்தை அஷ்டாங்கம் எனப்படும் 8 பிரிவுகளாக வகுத்தவர் தன்வந்திரி.
    iv) நாளங்கள் தாங்கிவரும் கருஞ்சிவப்புக் குருதி லோஹினி எனப்பட்டது.
    v) நாடிகளில் பாய்கின்ற சிவப்பு நிறமான குருதி அருணா எனப்பட்டது.

50. i) ஆயுர்வேத நூல் ஒன்றை இயற்றியவரில் அகத்தியரும் ஒருவர்.
    ii) ஆத்திரேயரின் சீடர்களில் ஒருவர் அக்கினிதேவர்.
    iii) சுஸ்ருத சங்கிதையில் பூர்வதந்திரம், உத்தர தந்திரம் எனும் இரு பிரிவுகள் உண்டு.
    iv) சரகசம்கிதை 8 பிரிவுகளையும் 120 அத்தியாயங்களையும் உடையது.
    v) கன்வந்திரி இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை என போற்றப்படுகிறார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பயிற்சிப் பரீட்சை

தரம் : 13 | 46 | T | II | இந்துநாகரிகம் II | நேரம்:3.00 மணித்தியாலயம்

சுட்டெண் : ..... புள்ளிகள்: .....

பகுதி – II

- பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும்
- பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி – I

01) இந்து நாகரிக வரலாற்றில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) வழிபாட்டு முறைகள்
ஆ) தத்துவ சிந்தனைகள்
இ) தர்மங்கள்
ஈ) முக்கியத்துவம்

(5x4=20 புள்ளிகள்)

02) இந்து சமுதாயத்தில் மகாபாரதம் பெறும் சிறப்பினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) இலக்கிய மரபு
ஆ) சமுதாய வழமைகள்
இ) சமய நெறிகள்
ஈ) தர்ம சிந்தனைகள்

(5x4=20 புள்ளிகள்)

03) இந்து சமுதாய வளர்ச்சியில் இந்துக்கல்விப் பாரம்பரியம் பெறும் இடத்தினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) தென்னக இந்துக் கல்விப் பாரம்பரியம்
ஆ) புராதன இந்துக் கல்வியின் நோக்கம்
இ) புராதன இந்துக் கல்விக் கோட்பாடுகள்
ஈ) அரண்மனைக் கல்வி மரபுகள்

(5x4=20 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி II

04) சங்கரருடைய வேதாந்தக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை விளக்கிக் கூறுக.

(20 புள்ளிகள்)

05) சைவ சித்தாந்தத்தில் பதி பற்றிய கருத்துக்களை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

06) இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகியஆரிய சமாஜத்தின் பணிகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

07) பல்லவர் காலக்கட்டடக்கலை வளர்ச்சியில் மன்னர்களின் பங்களிப்பை விளக்குக.

(20 புள்ளிகள்)

08) "இந்து விக்கிரகக் கலையின் சிறப்பினை உலகறியச் செய்தது நடராஜ மூர்த்தமே" ஆராய்க.

(20 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்
பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பழாத் அධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත
Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province